**செய்தி வெளியீடு எண் : 2102** **நாள் : 02.12.2024**

# செய்தி வெளியீடு

## தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள கடுமையான மற்றும் வரலாறு காணாத சேதங்களைக் கருத்தில்கொண்டு, உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தைத் தற்காலிகமாக சீரமைக்க 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடக் கோரி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம்

தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்டுள்ள தாக்கத்தினையும், அதனால் ஏற்பட்டுள்ள கடுமையான மற்றும் வரலாறு காணாத சேதங்களையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், சேதமடைந்த உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரத்தை தற்காலிகமாக சீரமைக்க தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் நிதியினை விடுவித்திடுமாறு கோரி இன்று (2–12–2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், ஃபெஞ்சல் புயல் 23, நவம்பர்–2024 அன்று குறைந்த தாழ்வழுத்தப் பகுதியாக உருவெடுத்து, தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் வரலாறு காணாத பேரழிவை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தொடக்கத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் கனமழை பெய்ததைத் தொடர்ந்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் மிக கனமழை பெய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். டிசம்பர் 1 ஆம் தேதி ஃபெஞ்சல் புயல் கரையைக் கடந்தபோது, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் காற்றின் வேகம் மணிக்கு 90 கி.மீ வேகத்தைத் தொட்டதால், சாலைகள் மற்றும் மின் இணைப்புகள் கடுமையாக சேதமடைந்தன என்றும், தருமபுரி, கிருஷ்ணகிரி, ராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட உள்மாவட்டங்களில் கனமழை மற்றும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புயல் மழையினால் ஏற்பட்ட வெள்ளம் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதோடு, பெரும்பாலான பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளதாகவும், பாதிப்புக்குள்ளான பகுதிகளில் வசிக்கும் மக்களை இடம்பெயரச் செய்துள்ளதாகவும், இதனால் உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பேரிடரால் மொத்தம் 69 இலட்சம் குடும்பங்களும், 1.5 கோடி பேர்களும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று

வருத்தத்துடன் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார். குறிப்பாக, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஒரு முழு பருவத்தின் சராசரிக்கு (50 செ.மீ.க்கு மேல்) ஒரே நாளில் மழை பெய்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக பரவலான வெள்ளம் மற்றும் உள்கட்டமைப்பு மற்றும் பயிர்களுக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க, தன்னிடமுள்ள அனைத்து ஆதாரங்களையும் திரட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வையிட மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதேநேரத்தில் 9 தேசிய பேரிடர் மேலாண்மைக் குழுவினரும், 9 மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினரும் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதோடு, 38,000 அரசு அலுவலர்கள் மற்றும் 1,12,000 பயிற்சி பெற்ற முதலுதவிப் பணியாளர்கள் அடங்கிய அர்ப்பணிப்புடன் கூடிய பணியாளர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும், இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்குத் தேவையான நிவாரண மையங்கள் நிறுவப்பட்டுள்ளன என்றும், உணவு தயாரிப்பு இடங்கள் நிறுவப்பட்டு, உணவு தயாரிக்கப்பட்டு, தேவைப்படுபவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், மேலும், வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற 12,648 மோட்டார் பம்புகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். புயல் வெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட சில மாவட்டங்களுக்கு இன்று (02.12.2024) தான் இன்று நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்ததாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேரழிவின் காரணமாக, 12 மனித உயிரிழப்புகளும், 2,416 குடிசைகள், 721 வீடுகள் மற்றும் 963 கால்நடைகள் இழப்புகளும் ஏற்பட்டுள்ளதோடு, 2,11,139 ஹெக்டேர் பரப்பளவிற்கு விவசாய மற்றும் தோட்டக்கலை நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புயல் வெள்ளத்தினால் 9,576 கி.மீ சாலைகள், 1,847 சிறுபாலங்கள் மற்றும் 417 குளங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 1,649 கி.மீ அளவிற்கு மின் கடத்திகள், 23,664 மின்கம்பங்கள் மற்றும் 997 மின்மாற்றிகள் சேதமடைந்துள்ளதாகவும், 1,650 பஞ்சாயத்து கட்டிடங்கள் 4,269 அங்கன்வாடி மையங்கள், 205 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 5,936 பள்ளிக் கட்டடங்கள், 381 சமுதாயக் கூடங்கள் மற்றும் 623 குடிநீர் வழங்கல் பணிகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் வருத்தத்துடன் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்தச் சேதங்கள் குறித்து, தமிழ்நாடு அரசு முதற்கட்ட மதிப்பீட்டை மேற்கொண்டு, தற்காலிக சீரமைப்பு பணிகளுக்கு ரூ.2,475 கோடி தேவைப்படுகிறது என கண்டறிந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், பேரிடரின் அளவு மாநிலத்தில் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாக வேதனை தெரிவித்துள்ளார். எனவே, இந்த இயற்கைப் பேரிடரின் விளைவுகளை சமாளிக்க மாநிலத்திற்கு அவசர நிதி உதவி தேவைப்படுவதாகவும், பாதிப்புகளின் அளவு மற்றும் மறுசீரமைப்பின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, இடைக்கால நிவாரணமாக ரூபாய் 2 ஆயிரம் கோடியினை உடனடியாக விடுவிக்குமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அவசரகால நிதி மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு முயற்சிகளுக்கு மாநில அரசுக்கு பெருமளவில் உதவிகரமாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழ்நாட்டில் இந்தப் புயல் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்த விரிவான மதிப்பீட்டை மேற்கொள்ள ஒன்றியக் குழுவை விரைவில் அனுப்புமாறு கேட்டுக்கொண்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒன்றியக் குழுவினரின் ஆய்வின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்கட்டமைப்பு, விவசாயம் மற்றும் வாழ்வாதாரங்களில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு ஏற்பட்டுள்ள மோசமான தாக்கத்தை எதிர்கொள்ள, தேவைப்படும் கூடுதல் நிதியினை வழங்கிடுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ்நாடு எதிர்கொண்டிருக்கும் இந்த நெருக்கடியான நிலையிலிருந்து மீண்டு, இயல்பு நிலையை விரைவில் எட்டுவதற்கு, தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு உறுதுணையாக இருக்கும் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவ்விஷயத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் ஆதரவையும், சாதகமான பதிலையும் விரைவில் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## Text of the D.O. Letter of Thiru M.K. Stalin, Hon’ble Chief Minister of Tamil Nadu addressed to the Hon’ble Prime Minister of India

I write this letter to draw your attention to the severe and unprecedented damages caused by the impact of Cyclone "Fengal," in Tamil Nadu and request immediate assistance of Rs 2000 crore from NDRF to undertake temporary restoration of damaged infrastructure and livelihood.

The Cyclone Fengal emerged as a Low-Pressure Area on 23rd November 2024 and has caused unprecedented devastation across 14 districts of Tamil Nadu. Initially, it brought heavy rainfall to the districts of Thanjavur, Tiruvarur, Nagapattinam, and Mayiladuthurai. Subsequently, districts such as Chennai, Thiruvallur, Kanchipuram, Chengalpattu, and Villupuram experienced extremely heavy rainfall. Upon its landfall on 1st December 2024, districts of Villupuram, Kallakurichi, Cuddalore and Tiruvannamalai, suffered extensive damage to roads, electricity lines as wind speeds touched very high speed of 90 km/h. It also caused heavy inundation and damages in interior districts of Dharmapuri, Krishnagiri, Ranipet, Vellore and Tirupathur.

The deluge has caused extensive disruptions, inundating vast areas, displacing population and severely impacting infrastructure and livelihood. A total of 69 lakh families and 1.5 crore individuals have been adversely affected by this calamity. The districts of Villupuram, Tiruvannamalai and Kallakurichi, in particular, received rainfall equivalent to an entire season's average (more than 50 cm) in a single day, resulting in widespread flooding and severe damage to infrastructure and crops.

In response, the State Government has mobilized all available resources to provide relief and rehabilitation to the affected population. Senior Ministers and officers have been deputed to oversee operations in the districts, while 9 teams from the National Disaster Response Force (NDRF) and 9 teams from the State Disaster Response Force (SDRF) have been deployed. A dedicated workforce comprising 38,000 government officials and 1,12,000 trained first responders are actively engaged in rescue and relief operations. Relief shelters have been established to accommodate displaced families, common kitchens have been made operational and food packets have been distributed to those in need. Furthermore, 12,648 motor pumps have been deployed to drain water from inundated areas. I have personally visited some of the most affected districts today (02.12.2024).

The catastrophic event has resulted in loss of : 12 human lives, 2,416 huts, 721 houses and 963 cattle, inundation of 2,11,139 hectares of agricultural and horticultural land, damage to 9,576 km of roads, 1,847 culverts and 417 tanks, destruction of 1,649 km of electric conductors, 23,664 electric poles and 997 transformers, severe impairment of 1,650 Panchayat buildings, 4,269

Anganwadi Centers, 205 Primary Health Centers, 5,936 school buildings, 381 community halls and 623 water supply schemes.

The State Government has carried out an initial assessment of these damages and estimated that Rs. 2,475 crores is required for temporary restoration efforts (Details in Annexure). Despite our best efforts, the scale of this disaster has overwhelmed the State's resources and the State needs urgent financial assistance to manage the fallout of this natural disaster. Given the magnitude of destruction and the urgent need for restoration, I humbly request immediate release of an interim relief amounting to Rs. 2,000 crores from the National Disaster Response Fund (NDRF). This assistance will significantly aid emergency restoration and rehabilitation efforts.

Additionally, I request the deputation of a Central Team at the earliest to undertake a comprehensive assessment of the damages. Based on their findings, I seek your kind consideration for further financial assistance to address the unprecedented adverse impact on infrastructure, agriculture and livelihoods in the affected districts.

I am confident that Government of India will support Tamil Nadu at this crucial moment to overcome this crisis and quickly restore normalcy. I look forward to your support and a favourable response at the earliest.

••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu